**செய்தி வெளியீடு எண்:771** **நாள்: 13.11.2017**

## செய்தி வெளியீடு

அருங்காட்சியகங்கள் துறையின் சார்பாக, சென்னை அரசு அருங்காட்சியகத்தில் ஒவ்வொரு ஆண்டும் குழந்தைகள் தினமான நவம்பர் மாதம் 14-ஆம் நாள் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டு வருகிறது. படிக்கும் வகுப்பு வாரியாக பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு ஓவியப் போட்டி மற்றும் போச்சுப் போட்டி ஆகியவை நடத்தப்பட்டு, அதில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும், சான்றுகளும் வழங்கப்படுகிறது. வரும் 14.11.2017 (செவ்வாய்க்கிழமை) அன்று ‘‘குழந்தைகள் தின விழா’’ அரசு அருங்காட்சியகத்தில் கீழ்க்கண்டவாறு கொண்டாடப்பட உள்ளது.

| | |
|---|---|
| காலை 10.30 மணிக்கு | அருங்காட்சியக நூற்றாண்டு கண்காட்சிக் கூடத்தில் பள்ளி மாணவர்களின் ஓவியக் கண்காட்சி தொடக்க விழா. |
| காலை 10.45 மணிக்கு | அருங்காட்சியக கலையரங்கில் பரிசளிப்பு விழா. |

இவ்விழாவில் மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன், அவர்கள் பள்ளி மாணவர்களின் ஓவியக் கண்காட்சியினை தொடங்கி வைத்து விழாப் பேருரையாற்றுகிறார். அருங்காட்சியகங்கள் துறையின், இயக்குநர் செல்வி. கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையுரையாற்றுவார்கள்.

**வெளியீடு : — இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை—9**